# DEPOSITION OF WITNESS
## In the Court of Judicial Magistrate No.II, Mettur
**Case No : C.C. 283/2023**

**Prosecution witness : அ.சா. 8 Date : 26.06.2024**

| Name : அன்னக்கொடி | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது மேச்சேரி காவல் நிலையத்தில் முதல் நிலைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022-ம் வருடம் மேச்சேரி காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்தபோது, கடந்த 26.10.2022ம் தேதி காலை 10.15 மணிக்கு சேலம் அரசு மருத்துவமனை சவக்கிடங்கு முன்பாக குற்றஎண். 560/2022 சாலை விபத்து சம்மந்தமாக காவல் ஆய்வாளர் அருள்பாண்டி (32) த/பெ சிவராஜ் என்பவருடைய பிரேதத்தை என்னிடம் ஒப்படைத்து இறப்பின் உண்மைத்தன்மையை அறியவேண்டி, சடலக்கூறாய்வு செய்தற்கு முன்பு மருத்துவர் முன்பு அடையாளம் காட்ட பணித்தார்.

2) நான் அன்றைய தினம் பகல் 02.30 மணிக்கு மருத்துவர் அருண்கௌதம் அவர்களிடம் சடலத்தை அடையாளம் காட்டி ஒப்படைத்து பிரேத பரிசோதனை முடிந்த பின்னர் உறவினர் வசம் நல்லடக்கம் செய்வதற்காக ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

3) பிரேத பரிசோதனை அறிக்கையை எப்போது பெற்றுவந்து காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன் என்றால் அன்றையதினம் மாலை 04.00 மணிக்கு ஒப்படைத்தேன். யாரிடம் ஒப்படைத்தேன் என்றால் காவல் ஆய்வாளர் வசம்

ஒப்படைத்தேன். எந்த தேதியில் என்னை விசாரித்தார் என்றால் அன்றையதினம் விசாரித்தார். ஆய்வாளரிடம் பாஸ்போட் ஒப்படைத்தேன் என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/-தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.2**
**மேட்டூர்.**